எழுப்புதல் ஜெப ஐக்கியத்தின்

# ஐக்கிய மலர்

Volume No: 26 Issue No: 5 Bro.P.D.ஞானப்பிரகாசம் February - 2024

ஆயுட்கால ஐக்கிய வாக்குத்தத்தம் :

*சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்,*
*கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.*

*ஏசாயா 60:22*

**2024-ம் வருட ஐக்கிய வாக்குத்தத்தம் :**

**"உங்களைப்பார்க்கிலும்**
**ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை**
**நீங்கள் துரத்துவீர்கள்."** உபாகமம் 11:23.

**"கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்."**

II கொரிந்தியர் 10:18



தனிப்பிரதி ரூ. 5.00
ஆண்டுச் சந்தா ரூ. 60.00

## பிப்ரவரி மாத வாக்குத்தத்தம் : 2024

**"நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்".** சகரியா 9:12

பிப்ரவரி மாத எச்சரிப்பின் வசனம்: **"அப்பொழுது நீங்கள் கொண்டிருந்த ஆனந்த பாக்கியம் எங்கே?"** கலாத்தியர் 4:15

### உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், எழுப்புதல் ஜெபஐக்கிய ஊழியர்கள் மற்றும் தேவ பிரசன்னத்தை விரும்புகிற யாவருக்கும் வாழ்த்துகளை கூறிக் கொள்கிறேன்.

இப்புதிய மாதத்திலும், தேவன் நம்மோடுகூடயிருந்து நமக்குத் தேவையான போதனைகளை வசனத்தின் மூலம் கொடுத்து, அதை நிறைவேற்றுவாராக. இரட்டிப்பான நன்மைகளை இம்மாதத்தில் நாம் அனைவரும் பெற்றுக்கொள்ள கருத்துடன் ஜெபிப்போம். எச்சரிப்பு வசனத்தின்படி நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலே ஆனந்த பாக்கியத்தை இன்னும் அதிகம் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த வருடத்திலே தேவன் நமக்கு தந்த வாக்குத்தத்தங்களை அடிக்கடிச் சொல்லி ஜெபிப்போம். வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே நமக்குச் செய்வாராக. வழக்கம்போல் நீங்கள் கூறும் உங்கள் தேவைகளுக்காக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம். நீங்களும் ஜெபியுங்கள், நாம் அனைவரும் இணைந்து ஜெபிக்கும்போது தேவன் செய்யும் அற்புதங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இம்மாதத்தில் தேவன் நமக்குத் தந்த அனைத்து ஊழியங்களையும் செய்யவும் இன்னும் புதிய ஊழிய வாசல் திறக்கவும் கருத்தாய் ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை நடத்தினால் நீங்கள் இருக்கும் இடத்தில் ஐக்கிய ஊழியத்தை எடுத்துச்செல்ல பிரயாசப்படுங்கள். உங்கள் பிரயாசங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பார். அடிக்கடி ஐக்கிய கூடுகையிலே கலந்துக்கொள்ளுங்கள். அது உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு ஒரு வளர்ச்சியாக காணப்படும். புதிய ஆத்துமாக்களும் எழும்புவார்கள். இயேசுவின் வருகைக்கு முன்னால் வசன எழுப்புதல் தேச அளவில் நடைபெற வேண்டுமென்று நாம் விரும்பி ஜெபித்து வருகின்றோம். உங்கள் ஜெபமும் எழுப்புதலுக்காக அதிகம் தேவை. கர்த்தருக்கு சித்தமானால் வருகின்ற மே மாதம் 2,3,4 ஆகிய தேதிகளில் சுரண்டையில் வைத்து 45வது ஆண்கள் தியான முகாம் நடைபெற உள்ளது. இதற்காக நீங்கள் ஜெபிக்கவும், உங்கள் அருகில் உள்ள நண்பர்களை அழைத்து வரவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நம்முடைய ஐக்கியத்தின் ஊழியர்களை இன்னும் தேவன் பாதுகாக்கவும், வேத வசனங்களை ஆவியானவர் நன்றாக கற்றுக்கொடுக்கவும், ஐக்கிய போதனைகள் யாவருக்கும் நன்றாக புரியும்படி கர்த்தரே ஐக்கியத்தை முழு பொறுப்பெடுத்து நடத்தவும் ஜெபிக்கிறோம். கர்த்தர் நமக்கு நடத்தித்தருவார். நம்முடைய ஊழியங்களுக்கும், குடும்பங்களுக்கும் எதிராக பிசாசானவன் கொண்டு வருகின்ற ஆயுதங்கள் வாய்க்காமல் போக போராடி ஜெபியுங்கள். இன்னும் இந்த ஐக்கியத்தை நடத்துவதற்கு அனைத்து ஊழியர்களுக்கும் குறிப்பாக தேவனால் கட்டளைப்பெற்ற ஊழியர்களுக்கும் தேவன் சமயத்திற்கேற்றபடி பேசும் விசேஷித்த ஆவியை அருளும்படியாகவும் ஒவ்வொரு நாளும் ஆவியின் அபிஷேகம் ஐக்கியக் கூடுகையில் காணப்படவும் வாஞ்சிக்கின்றோம். கடந்த 50 ஆண்டுகளாக வழி நடத்தின ஆண்டவர் அவருடைய வருகைபரியந்தமும் வழி நடத்துவார். இவ்வருடம் நடைபெற இருக்கின்ற பாராளுமன்ற தேர்தலில் தேவசித்தம் தேசத்தில் வெளிப்படும்படியாக நம்முடைய தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் போராடி ஜெபிப்போம். இந்தியா முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கப்பட திரளான ஊழியர்களை தேவன் எழுப்ப எப்பொழுதும் கருத்துடையவர்களாக ஜெபிப்போம். இப்பத்திரிக்கையின் ஆசீர்வாதங்களை அவ்வப்போது பகிர்ந்து கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். ஆமென்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 9.00 மணிக்கு google meet ல் இந்த link ல் https://meet.google.com/non-taah-nua ஜெபம் நடைபெறுகிறது.


கிறிஸ்துவின் பணியில்,

**P.துரைசிங் ஞானப்பிரகாசம்,**

ஆசிரியர், Cell: 90255 53614


வங்கி மூலம் காணிக்கை அனுப்புவோர், கீழ்க்கண்ட கணக்கு எண்ணில் அனுப்பி அதின் விபரத்தை ஐக்கியத்திற்கு தெரியப்படுத்துங்கள்.

STATE BANK A/c.No
Branch : Surandai
IFSC - SBIN0011065

Bro. **P.Duraisingh Gnanapragasam**

3 0 4 0 6 4 3 8 9 6 2

**Revival Prayer Fellowship Trust**

3 2 4 1 2 6 2 4 5 7 2

G pay
+919942950132


தொடர்புக்கு: சகோ. P.D.ஞானப்பிரகாசம் Cell: 90255 53614 | சகோதரி. S.சந்திரா ஞானப்பிரகாசம் Cell: 99653 36459 | சகோ. D.ஜோயல் Cell: 99429 50132

தேவ செய்தி

## "கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்" II கொரிந்தியர் 10:18

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதம் தேவ செய்தியாக, கர்த்தரால் புகழப்பட்ட உத்தமர்களைக் குறித்து தியானிப்போம்.

### I கர்த்தரால் புகழப்பட்ட தானியேல்: தானி. 9:23

நீ மிகவும் பிரியமானவன் ஆதலால் நீ வேண்டி கொள்ளத்தொடங்கினபோதே கட்டளை வெளிப்பட்டது. தானியேல் தேவனுக்குப் பிரியமாய் நடந்தபடியால் தேவனால் இவ்விதமாகப் புகழப்பட்டார். தானியேல் பாபிலோன் தேசத்திற்குச் சென்றகாலம் முதல் தேவனுக்குப் பிரியமான காரியங்கள் தானியேலிடம் காணப்பட்டது. அதில் சில காரியங்களை தொடர்ந்து தியானிப்போம்.

ராஜபோஜனத்தைச் சாப்பிடவேண்டிய சூழ்நிலை வந்தபோது அதை அவர் வெறுத்து பருப்பு முதலான மரக்கறிகளை பிரியமாய் ஏற்றுக்கொண்டது அவரது வெற்றிக்கு காரணமாகும். அவர் மாத்திரம் அல்ல அவரது தோழர்களும் அவருக்கு உதவியாக இருந்தார்கள். மேலும் ராஜா கண்ட சொப்பனத்திற்கு சாஸ்திரிகளால் விளக்கம் சொல்ல முடியாவிட்டாலும் தானியேலும், அவரது தோழர்களும் ஜெபித்து ராஜாவுக்கு உரிய உத்தரவு கொடுத்தார்கள் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (தானி.2:19). இதுமட்டுமல்ல தானியேலை குற்றஞ்சாட்டி அவரைச் சிங்ககெபியில் போடவேண்டும் என்ற காரியத்தை சட்டமாக கொண்டு வரும்போது தானியேல் ஜெபித்து சிங்ககெபிக்குள் சென்றாலும் ஒரு சேதமும் அடையாமல் இருந்தான். ராஜாவே புகழுவதற்கு காரணமாக இருந்தது.

தானியேல் தேசம் முழுவதும் சிறப்பாக ஆட்சி செய்தபடியால் அவரை எதிர்த்து செய்யப்பட்ட அனைத்து சூழ்ச்சிகளும் பொய்யாய் போனது ராஜா அறிந்த காரியமாகும் (தானி.6:10). இப்படிப்பட்ட அநேக காரியங்கள் தானியேலுக்குள் இருந்தது அவர் அதை தேவ நாமம் மகிமைக்கென்று பயன் படுத்தினார். ஆகவே தானியேலின் காரியம் ஜெயமாக இருந்தது. அநேகர் தன்னைத்தானே புகழ்ந்தாலும், தானியேல் மாத்திரம் கர்த்தரால் புகழப்படக் கூடிய அளவிற்கு அவருடைய வாழ்க்கை அமைந்தது.

பிரியமானவர்களே, நாம் எந்தச்சூழ்நிலையில் எப்படி இருந்தாலும், மனுஷர்கள் நம்மைப் புகழ வேண்டுமென்று நாம் விரும்பாமல், தேவனுக்கு பிரியமானவைகளையே செய்ய நாம் கவனமுடையவர்களாக இருக்க வேண்டும். தானியேல் அவ்விதமாக இருந்தபடியால் நீ எனக்கு பிரியமானவன் நீ வேண்டிக் கொள்ள தொடங்கின போதே கர்த்தர் பதில் கொடுத்தார் என்று வேதத்தில் நாம் வாசிக்கின்றோம்.

### II கர்த்தரால் புகழப்பட்ட ஒரு பெண்: மத்தேயு. 26:6-13

பெத்தானியாவில் இயேசு ஒரு வீட்டில் இருக்கையில் ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல்பரணியைக் கொண்டு வந்து, அவர் போஜனபந்தியிலிருக்கும்போது; அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள். இந்த தைலம் விலையேறப்பெற்றது என்று சீஷர்கள் அறிந்து இதை உயர்ந்த விலைக்கு விற்று தரித்திரர்களுக்கு கொடுக்கலாமே என்று கூறின போது இயேசு அந்தப் பெண் செய்த கிரியைகளை புகழ்ந்து பாராட்டினார். அதுமாத்திரமல்ல நீங்கள் ஏன் இந்த ஸ்திரீயை தொந்தரவு படுத்துகிறீர்கள் என்று கடிந்து கொண்டார். அதுமாத்திரமல்ல இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று இயேசு சொன்னதாக மத்தேயு 26:13ம் வசனத்தில் நாம் வாசிக்கின்றோம்.

அந்த ஸ்திரீ விலையேறப்பெற்ற தைலத்தால் இயேசுவைக் கனப்படுத்தினது அவளுடைய பெயரும், புகழும் இன்றும் உலகமுழுவதும் அசைக்க முடியாதபடி நமக்கு ஒரு சாட்சியாக இருக்கின்றது. பிரியமானவர்களே, நாமும் அந்த ஸ்திரீயைப் போல நம்மால் இயன்றதைக் கர்த்தருக்காக அர்ப்பணித்து மனிதனுடைய புகழ்ச்சியை விரும்பாமல் தேவனால் புகழப்படுகிறவர்களாக நம்மை நாமே புதுப்பித்து கொள்ள வேண்டும். ஒருவேளை மனிதர்கள் நம்மை புகழ்வார்களானால், அந்தப் புகழ்ச்சி நிலையானதாக இருக்க முடியாது. ஆனால் ஆண்டவர் புகழும்படி நடந்து கொள்வோமானால் அது ஒரு போதும் மறக்கவோ, மாற்றவோ முடியாது. ஆண்டவர் நம் ஒவ்வொருவர் கையிலும் சில பொறுப்புகளை கொடுத்திருக்கிறார். அந்த பொறுப்புகள் யாவையும் நாம் நிறைவேற்றுகிறோமா என்று நம்மை நாமே நிதானித்து அறிய வேண்டும். அன்றைக்கு ஆண்டவர் புகழ்ந்தாலும், சீஷர்களுக்கு அது பெருமையாக தெரியாமால் போய்விட்டது. அவர்கள் புகழுவதற்கு பதிலாக இகழ்ச்சியாக கூறினார்கள். நாம் செய்யும் காரியங்களில் சிலர் இகழ்ந்தாலும் நாம் அதைப் பொருட்படுத்தாமல் நாம் செய்ய வேண்டியதை செய்துகொண்டே இருக்க வேண்டும். நானும் கூட இந்த ஊழியத்தை ஐக்கியத்துடன் இணைந்து செய்ய ஆரம்பித்த நாட்களில் அநேகர் அற்பமாக நினைத்த நாட்கள் உண்டு. ஆனாலும், சோர்ந்து போகாமல் ஊழியங்களைச் செய்ய பரிசுத்த ஆவியானவர் அன்றைக்கே பெலத்தையும், சத்துவத்தையும் கொடுத்து வழிநடத்தினதை, இன்றைக்கும் நான் நினைத்து பார்க்கின்றேன். தேவனுக்கு நன்றி மாத்திரம் கூறி எனக்கு நியமித்த ஓட்டத்திலே பொறுமையோடு ஓட வேண்டுமென்று உறுதியான விசுவாசத்துடன் ஜெபித்து வருகிறேன்.

## III கர்த்தரால் புகழப்பட்ட மரியாள்: லூக்கா 10:42

தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார் (லூக்கா 10:42). மார்த்தாள், மரியாள் வீட்டில் இயேசு வந்த நாட்களில் அவருடைய பாதத்தில் உட்கார்ந்து அவருடைய வார்த்தையை கேட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் அழைத்த அவளுடைய சகோதரியாகிய மார்த்தாள் ஆண்டவர் பாதத்தில் அமர்ந்திராமல் பற்பல வேலைகள் செய்வதில் வருத்தம் அடைந்து, ஆண்டவரிடம் வந்து நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள் (லூக்கா 10:40). மரியாளைப் போல மார்த்தாள் இராமல் பற்பல வேலைகளைச் செய்ய தன்னை அர்ப்பணித்து அந்த வேலைகளைச் செய்ய முடியாமல் இயேசுவிடமே வந்து தன்னுடைய அங்கலாய்ப்பைத் தெரியப்படுத்துகிறாள். இயேசு மார்த்தாளைப் புகழாமல், மரியாளைப் புகழ்ந்து பேசினார்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, ஒரே வீட்டில் மார்த்தாள், மரியாள் குடியிருந்தாலும் கர்த்தரால் புகழப்பட்டது மரியாளே ஆகும். அதற்குக் காரணம் தன்னுடைய வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தபடியால், அந்த வசனத்தின் வல்லமையை நன்றாக மரியாள் புரிந்து கொண்டாள். நிச்சயமாக தன்னுடைய வேலைகளை செய்வதற்கு ஆண்டவருடைய வசனங்கள் பெலனாக இருக்கும் என்பதை மரியாள் புரிந்து கொண்டபடியால் அவளும் கர்த்தரால் புகழப்பட்டவளாக வேதம் நமக்கு கூறுகின்றது.

இச்செய்தியை வாசிக்கின்ற நாம் அனைவரும் நமக்குரிய கடமைகளையும், உலகப்பிரகாரமான பொறுப்புகளையும், ஊழியங்களையும் செய்ய அழைக்கப்பட்டு இருக்கின்றோம். இவைகள் சரியாக செய்யப்பட வேண்டுமானால், அதைசெய்வதற்குரிய வசனங்கள் நமக்கு அவசியம். இதை மரியாள் நன்றாக புரிந்துகொண்டது போல நம்முடைய அன்றாட வாழ்வில் நாமும் வசனங்களை வைத்து நம் வேலைகள் அனைத்தையும் நன்றாக செய்ய முடியும். ஊழியம் என்று சொல்லிவிட்டு, வேலைகளை செய்யாமல் இருந்துவிடக்கூடாது. ஆனால் அந்த வேலையை செய்ய சரியான பெலன் கொடுப்பது வசனமே. இந்த நிதானம் மார்த்தாளுக்கு இல்லாமல் போய்விட்டது. இச்செய்தியை தியானிக்கிற நாம் முதலாவது தேவனுடைய ராஜ்யத்திற்குரிய காரியங்களை தேடும்போது அப்பொழுது மற்றவைகளெல்லாம் கூடக்கொடுக்கப்படும் என்பதை மறந்து விடக்கூடாது. இப்படியாக நம்முடைய வாழ்க்கையை நாம் ஜெபத்தோடு ஒழுங்குபடுத்தி கொள்ள கர்த்தர் அழைக்கிறார்.

## IV கர்த்தரால் புகழப்பட்ட நூற்றுக்கு அதிபதி: லூக்கா 7:1-10

இயேசு இவைகளைக்கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தமக்குப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். ஆண்டவர் நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தை புகழ்ந்து பாராட்டினதை வேதத்தில் நாம் வாசிக்கின்றோம் (லூக்கா 7:9). இந்த நூற்றுக்கு அதிபதிக்கு இயேசு பாராட்டின விசுவாசம் எப்படி வந்தது. அவர் தன்னுடைய வேலைக்காரனுடைய சுகத்திற்காக இயேசுவை நம்பி இருந்தார். அதுமட்டுமல்ல, இயேசு தன்னுடைய வீட்டிற்கு வருவதையும் அவர் கனமாக எண்ணினார். அதுமட்டுமல்ல ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான் என்கிற ஆழ்ந்த விசுவாசம் அந்த நூற்றுக்கு அதிபதிக்கு இருந்ததை இயேசு அறிந்து அவரைப் புகழ்ந்து அவரது வேலைக்காரனுக்கு சுகத்தை கட்டளையிட்டார். அவனும் சுகம் அடைந்தான்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, இயேசு பாராட்டிய விசுவாசம் இன்றும் நம் அனைவருக்கும் தேவை. இந்த விசுவாசத்தை வேத வசனத்தின் மூலமாக பெற்றுக் கொண்டு நம்முடைய இரட்சிப்பின் வாழ்க்கையையும், ஊழியத்தையும் நாம் சிறப்பாக அமைத்து கொள்ள வேண்டும். விலையேறப்பெற்ற விசுவாசத்தை ஒரு போதும் இழந்து விடக்கூடாது. இந்த விசுவாசம் உலகமெங்கும் இன்னும் பரவவேண்டும். விசுவாசக்குறைவு வரும்போது காத்திருந்து ஜெபித்து புதுபெலனை பெற்று கொள்ள வேண்டும். அப்போது நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற அனைத்து வேலைகளையும் செய்ய நாம் மிகவும் கருத்துள்ளவர்களாக இருக்க வேண்டும்.

தேவனால் புகழ்ந்து பாராட்டப் பெற்ற தானியேல், ஒரு பெண், மரியாள், நூற்றுக்கு அதிபதி ஆகியோரின் சிறப்பு கிருபைகளை இச்செய்தியில் தியானித்து இருக்கின்றோம். இன்னும் தேவனால் புகழப்பட்டவர்கள் வேதத்தில் அநேகர் உண்டு. அவர்களையும் அவர்கள் தேவனால் எவ்விதமாக புகழப்பட்டார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு போதும் மனிதர்களின் புகழ்ச்சிக்கு நாம் இடங்கொடுத்து விடக்கூடாது. நம்முடைய ஊழியத்திலே இன்னும் சிறப்பான கிரியைகளை தேவன் செய்வார். அதற்கு இப்படிப்பட்ட வேத வசனங்கள் நமக்கு துணை செய்யும். கடைசிக் காலத்தில் விசுவாசத்தை காண்பாரோ என்று வேதம் கூறுகின்றது. அநேகர் விசுவாசத்தை விட்டு விலகிப் போனாலும், அவர்களை தடுத்து நிறுத்துவது நம்முடைய கடமையாகும். தேவனால் புகழப்படுபவர்களாக கர்த்தர் நம் வரும் காலங்களை சிறப்பாக ஆசீர்வதித்து வழி நடத்துவார். ஆமென்.

சகோ. **P.D.ஞானப்பிரகாசம்,** சுரண்டை.

ஜெப எண் - 267 **ஜெப நாள்: 06-02-2024 செவ்வாய்** காலை 6.00 To மாலை 6.00 வரை.

## 12 மணி நேர உபவாச சங்கிலித் தொடர் ஜெபமும், மாதம் முழுவதும் ஜெபிக்க வேண்டிய ஜெப விண்ணப்பங்களும்

### 1. பிப்ரவரி மாதத்தின் ஆசீர்வாதங்களுக்காக :

1. பிரசங்கி 4:9 ஒண்டியாய் இருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். நாம் கூடி ஜெபித்து புதிய பெலனை இம்மாதத்தில் இன்னும் பெற்றுக் கொள்ள வேண்டும். ஐக்கியத்தை விட்டு விடாமல் நாம் கூடி ஜெபிக்கும் கிருபையை தேவன் தர ஜெபிப்போம்.

2. அப். 1:8 பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து... இம்மாத்தில் ஒவ்வொரு நாளிலும் பரிசுத்த ஆவி நம்மீது இறங்கி பலத்த கிரியை செய்யவும், இதனால் அசுத்த ஆவி நம்மை விட்டு அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

3. யோபு 33:14 தேவன் ஒரு விசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் விசைப் பார்த்துத் திருத்துகிறவரல்லவே. தேவன் நமக்குத் தந்த இந்த மாத வாக்குத்தத்தம் முழுமையாய் நிறைவேறவும், நாம் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்யவும் ஜெபிப்போம்.

4. II நாளா. 20:35 அதற்குப்பின்பு, யூதாவின் ராஜாவாகிய யோசபாத், பொல்லாப்புச் செய்கிறவனான அகசியா என்னும் இஸ்ரவேலின் ராஜாவோடே தோழமை பண்ணினான். இப்படிப்பட்ட சூழ்நிலை இம்மாதம் நமக்கு வராமல் இருக்க ஜெபிப்போம்.

5. ரோமர் 8:28 தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். இம்மாதம் நடக்கும் அனைத்துக் காரியங்கள் நன்மைக்கே என்று விசுவாசித்து தேவனுக்கு நன்றி கூறி ஜெபிப்போம்.

6. I யோவான் 2:17 உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம். நம்முடைய இருதயம் உலகத்தில் உள்ள காரியங்களை நோக்காமல், கிறிஸ்துவின் மேல் எப்போதும் தாகமாய் காணப்படவும், தேவன் நமக்கு சகாயம் செய்யவும் ஜெபிப்போம்.

7. உபாகமம் 2:7 உன் தேவனாகிய கர்த்தர், உன் கைக் கிரியைகளை எல்லாம் உன்னை ஆசீர்வதித்து வருகிறார். இம்மாதமும் நம் கையின் பிரயாசத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கவும், புதிய ஆசீர்வாதம் கிடைக்கவும் ஜெபிப்போம்.

### 2. நம் தேசம் முழுவதிலும் விசுவாசமார்க்கத்தார் எழும்ப :

1. வெளி.22:11 பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். நம் தேசம் முழுவதும் விசுவாச மார்க்கத்தார் எழுப்பக்கூடிய பரிசுத்தம் விரைவில் தேசத்தில் உண்டாகவும், தேவன் கிரியை செய்து அசுத்தமானவைகளை அழித்துப் போட ஜெபிப்போம்.

2. ஆதியாகமம் 18:22 ஆபிரகாமோ, பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தான். நம் தேசம் முழுமையாய் தேவனுக்குச் சொந்தமாக, ஆபிரகாமைப் போல ஜெபிக்கிறவர்கள் எழும்பவும், கர்த்தர் பலத்த கிரியை செய்யவும் ஜெபிப்போம்.

3. சகரியா 3:9 இந்த தேசத்தின் அக்கிரமத்தை ஒரே நாளில் நீக்கிப் போடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். இவ்வசனத்தின்படி, தேவன் கிரியை செய்யவும், இதனால் விசுவாசமார்க்கத்தார் பலமாய் எழும்பவும் ஜெபிப்போம்.

4. கலாத்தியர் 3:9 அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நம் தேசம் விசுவாசத்திற்குள் வரவும், அதன் பயனாக அவர்கள் இதுவரை பெற்றிராத ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.

5. யாக்கோபு 4:6 தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். நம் தேசத்தின் ஜனங்களுக்குள் இருக்கும் பெருமை அழிக்கப்படவும், அதற்குப் பதிலாக மனத்தாழ்மை உண்டாக, இதை கர்த்தரே செய்யவும் ஜெபிப்போம்.

6. லூக்கா 19:43 உன்னைச் சந்திக்கும் காலத்தை நீ அறியாமற் போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில் போட்டு... நம் தேசத்தை கர்த்தர் சந்திக்கவும், அதனால் சத்துருவின் கோட்டைகள் அழியவும் ஜெபிப்போம்.

7. அப்.19:11 பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். எழுப்புதலை விரும்புகிற ஊழியர்கள் யாவர் மீதும் தூய ஆவியானவர் பலமாய் இறங்கி, ஊழியர்களை பயன்படுத்தவும், தேசமே விசுவாசத்திற்குள் வரவும் ஜெபிப்போம்.

### 3. பொதுவான தேவையுள்ளவர்களின் தேவைகள் சந்திக்கப்பட:

1. அப்.19:18 விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். ஜனங்களின் தேவைகள் சந்திக்கப்படவும், இவ்வசனத்தின்படி, ஆசீர்வாதம் பெற்றவர்கள் சாட்சி பகிரவும் ஜெபிப்போம்.

2. ஏசாயா 46:4 நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன். மூத்த வயதுள்ள விசுவாசிகள், ஊழியர்கள் அனைவரும் ஆரோக்கியமாய் வாழவும், சரீரத்தில் ஆரோக்கியம், ஊழியத்தில் எழுப்புதல் நிரந்தமாய் இருக்கவும் ஜெபிப்போம்.

3. தானியேல் 3:6 எவனாகிலும் தாழ விழுந்து, அதைப் பணிந்து கொள்ளாமல் போனால், அவன் அந்நேரம் எரிகிற அக்கினிச்சூளையின் நடுவிலே போடப்படுவான் என்றான். எதிர்ப்புகள் விசுவாசிகளை அசைக்காதிருக்க ஜெபிப்போம்.

4. சங்கீதம் 103:4 உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு, உன்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டி.... அழிவுக்கு நேராய் போய்க் கொண்டிருக்கும் ஜனங்கள் இயேசுவை அறிய, அழிவிலிருந்து காக்கப்பட ஜெபிப்போம்.

5. எண்ணாகமம் 16:50 வாதை நிறுத்தப்பட்டது. தேவையுள்ளவர்களின் தேவைகள் சந்திக்க தடை செய்யும் வாதைகள், சாபங்கள் இயேசுவின் நாமத்தில் நிறுத்தப்படவும், இதனால் தேவ பெலன் அவர்கள் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

6. ஆதி. 3:4 அப்பொழுது சர்ப்பம், ஸ்திரீயை நோக்கி, நீங்கள் சாகவே சாவதில்லை. பல்வேறு ஜனங்களுக்கு சர்ப்பமாகிய பிசாசின் மூலம் வரும் சோதனைகளில் இனி அவர்கள் சிக்காதபடி கர்த்தர் யாவரையும் பாதுகாக்க ஜெபிப்போம்.

7. லூக்கா 18:1 சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும். பல்வேறு சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டவர்கள் ஜெபத்தின் மேல் ஆசீர்வாதம் பெறவும், அவர்களுக்காக ஜெபிக்கிறவர்கள் ஏராளம் எழும்பவும் ஜெபிப்போம்.

## 4. எழுப்புதல் ஜெப ஐக்கியத்தில் தேவ நடத்துதல் காணப்பட:

1. I யோவான் 2:27 அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. அபிஷேகம் தினமும் ஐக்கியத்திற்கு வரவும், ஆவியானவர் நடத்துகிறபடியே ஐக்கிய ஊழியங்கள் செயல்படவும், அற்புதங்கள் நடைபெறவும் ஜெபிப்போம்.

2. I கொரி 15:58 ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து... ஐக்கியத்தில் அனைவரும் எடுக்கின்ற பிரயாசங்களை கர்த்தர் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

3. மத்தேயு 20:26 உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாய் இருக்கக்கடவன். இந்த வசனத்தின்படி ஐக்கியம் நடைபெறவும், அதற்குரிய ஆசீர்வாதம் ஊழியர்களுக்கு கிடைக்க ஜெபிப்போம்.

4. நீதி.1:23 என் கடிந்து கொள்ளுதலுக்குத் திரும்புங்கள். தேவன் கடிந்து கொள்ளும் போது, அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் இருதயம் ஐக்கியத்திற்கு உண்டாகவும், இதனால் தேவகிருபை ஐக்கியத்தில் இன்னும் பெருகவும் ஜெபிப்போம்.

5. யோசுவா 14:11 மோசே என்னை அனுப்புகிற நாளில் எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள் வரைக்கும் எனக்கு இருக்கிறது. காலேபை ஆசீர்வதித்த தேவ கரம் ஐக்கிய குடும்பங்களில் இன்னும் அதிகம் காணப்பட ஜெபிப்போம்.

6. யாத்திராகமம் 14:12 நாங்கள் எகிப்திலே இருக்கும் போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா இப்படிப்பட்ட அவிசுவாசமான வார்த்தை யாரிடமும் காணப்படாதபடி ஜெபிப்போம்.

7. I நாளா.13:14 கர்த்தர் ஒபேத் ஏதோமின் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார். ஐக்கிய குடும்பங்கள் எங்கியிருந்தாலும் செழிப்பாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்க ஜெபிப்போம்.

## 5. இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்பட :

1. மத்தேயு 25:4 புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டு போனார்கள். யாவரும் இப்படிப்பட்ட ஆயத்தங்களோடு எப்போதும் காணப்பட ஜெபிப்போம்.

2. எசேக்கியேல் 38:7 உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து. இவ்வசனத்தின்படி நம் மூலம் இரட்சிக்கப் பட்டவர்களை சந்தித்து இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படவும், அவர்களை காக்கவும், காவலாளியாய் இருக்கவும் ஜெபிப்போம்.

3. லூக்கா 21:36 ஆகையால் இனி சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்ப, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள். ஜெப ஆவி ஊற்றப்பட ஜெபிப்போம்.

4. மாற்கு 13:32 அந்த நாளையும், அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர, மற்றொருவனும் அறியான். இயேசுவின் வருகையைக் குறித்த தவறான கருத்துக்கள் கூறப்படும் போது, விழிப்புடன் இருக்க ஜெபிப்போம்.

5. II பேதுரு 3:10 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம். இவைகளெல்லாம் இயேசுவின் வருகைக்கு அடையாளமென்று அறிந்து ஆயத்தப்பட ஜெபிப்போம்.

6. சங்கீதம் 2:12 கொஞ்சக் காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும் அவரை அண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். தேவ கோபம் பற்றியெரியும் முன் ஜனங்கள் மத்தியில் பெரிய மனந்திரும்புதல் உண்டாக ஜெபிப்போம்.

7. மத்தேயு 25:33 செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளை தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். ஜனங்கள் இயேசுவின் வலது பக்கத்தில் சேரவும், இப்போதே நம்மை தகுதிப்படுத்த ஜெபிப்போம்.

பிப்ரவரி 2024

## தினமும் வேதத்தின் மகத்துவங்களைத் தியானித்து, ஜெபியுங்கள்.

01.02.24 வியாழன் : கலாத்தியர் 1:12 நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக பவுல் அனைத்தையும் கற்று கொண்டது போல நாம் அனைவரும் அனைத்து காரியங்களிலும் கிறிஸ்து இயேசு மூலமாய் கற்று கொள்ள வேண்டும். அப்படிச் செய்வோமானால் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையும், நம்முடைய குடும்பமும், நம்முடைய தொழில், ஊழியம் அனைத்தும் இன்னும் ஆசீர்வதிக்கப்படும்.

02.02.24 வெள்ளி : எபேசியர் 3:13 ஆகையால் உங்கள் நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக் கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே. நமக்கு வரும் உபத்திரவங்களை ஆசீர்வாதமாக நாம் எண்ணிக் கொள்ள வேண்டும். பவுல் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி அடைந்ததற்கு உபத்திரவங்களை மகிமையாய் எண்ணினதே ஆகும். நம்முடைய திராணிக்கு மேல் சோதனை ஒருபோதும் வராது. அந்த சோதனைகளும் அற்புதமாய் முடிவடையும்.

03.02.24 சனி : பிலிப்பியர் 2:14 நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப் போல பிரகாசிக்கிற நீங்கள்... நாம் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் கர்த்தருக்காக பிரகாசிக்க வேண்டும் என்பதே ஆண்டவரின் விருப்பமாகும். அதற்கு அடிப்படையானது ஜீவவசனமேயாகும். ஜீவ வசனத்தை பவுல் உறுதியாக பிடித்துக்கொண்டது போல நாம் அனைவரும் வசனத்தை நம்பி வாழ வேண்டும்.

04.02.24 ஞாயிறு : கொலோசெயர் 2:4 ஒருவனும் நயவசனப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன். குறி சொல்லுகிற ஆவியை உடைய ஒரு பெண் பவுலைக் குறித்து வஞ்சகமாக பேசினதை பவுல் தெளிவாக அறிந்துகொண்டு அந்தப் பொல்லாத ஆவியைத் துரத்தினார். அந்த ஆவி அவரை சேதப்படுத்தவுமில்லை, திரும்ப அவரிடம் வருவுமில்லை. இதைபோல நாம் அனைவரும் வஞ்சக ஆவிகளுக்கு இடங்கொடுத்திடாதபடி மிகவும் ஜாக்கிரதையுடன் தினசரி வாழ வேண்டும்.

05.02.24 திங்கள் : I தெசலோ.4:3 நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. பரிசுத்தத்தை நாம் தேவ சித்தமாக எண்ண வேண்டும். யோசுவா இந்த பரிசுத்தத்தை தேவ சித்தமாக எண்ணி ஜனங்களை சரியாய் வழிநடத்தினபடியால் யோர்தான் ஆற்றை எளிதாக கடந்து வர முடிந்தது. நம்முடைய குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் அத்தனை பேர்களையும் பரிசுத்தப்படுத்த வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். அப்போது நமக்கு ஜெயம் கிடைக்கும்.

06.02.24 செவ்வாய் : II தெசலோனிக்கேயர் 3:5 கர்த்தர் உங்கள் இருதயங்களை தேவனைப்பற்றும் அன்புக்கும் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராய் நடத்துவாராக. இந்த கர்த்தர் நம் ஊழியத்தில் உள்ள அனைவரோடும்கூட இந்த வசனத்தின்படி தங்கியிருக்க வேண்டும். அப்போது நம்முடைய விசுவாச ஜீவியம் அனுதினம் வெற்றியாக முடியும். எவ்வளவு பெரிய போராட்டம் வந்தாலும் அதை எளிதாக ஜெயிக்க முடியும். அப்போஸ்தலர்களுடைய அனுபவம் அப்படியாகவே இருந்ததை வேதத்தின் மூலம் நாம் அறியலாம்.

07.02.24 புதன் : I தீமோத்தேயு 3:1 கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்; இது உண்மையான வார்த்தை. விசுவாசிகளாகிய நம் அனைவருக்கும் தேவன் கண்காணிப்பு என்கிற வேலையைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய குடும்பத்தின் பிள்ளைகளை மட்டும் அல்ல நம் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்களையும், இன்னும் இரட்சிக்கப்படயிருப்பவர்களையும் நாம் ஜெபத்துடன் கண்காணிக்க வேண்டும். இந்த நல்ல பணியை அப்போஸ்தலர்களுக்கு தேவன் கொடுத்தது போல நமக்கும் கொடுத்துள்ளார்.

08.02.24 வியாழன் : II தீமோத்தேயு 2:4 தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ள மாட்டான். நாம் பிழைப்பதற்கு ஒரு தொழில் அவசியம். ஆனால் அந்தத் தொழில் நமக்கு ஒரு சோதனையாக அமைந்துவிடக்கூடாது. யூதாஸ் பணப்பொறுப்பு உள்ளவனாக இருந்தாலும் ஊழியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. ஆகையால் அந்த பொறுப்பு அவருக்கு ஒரு கண்ணியாக அமைந்துவிட்டது.

09.02.24 வெள்ளி : தீத்து 2:7 நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து..

இயேசு கிறிஸ்து சகல காரியங்களுக்கும் தன்னை மாதிரியாக காண்பித்தது போல கர்த்தருடைய ஊழியம் செய்யும் நாம் அனைவரும் நம்மையும், நம்முடைய பிள்ளைகளையும் எல்லா இடங்களிலும் நல்மாதிரியாக காண்பிக்கவேண்டும். அவ்வாறு செய்யும்போது ஊழியத்தை யாரும் குற்றஞ்சாட்டமுடியாதபடி தேவன் காத்துக் கொள்வார். அது மாத்திரமல்ல நம்முடைய விசுவாச ஜீவியம் நாளுக்குநாள் வளர்ச்சியடையும். தீமோத்தேயுவின் குடும்பம் நமக்கு முன்மாதிரியாக வேதத்தில் எழுதப்பட்டுள்ளது.

10.02.24 சனி : பிலேமோன் 1:5 என் ஜெபங்களில் உம்மை நினைத்து, எப்பொழுதும் என் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செய்து... நாம் நமக்காக அடிக்கடி ஜெபம் பண்ணுவது போல யார் நம்மிடத்தில் ஜெபவிண்ணப்பம் வைத்தார்களோ அவர்கள் அனைவரையும் ஜெபத்தில் நினைக்க வேண்டும். பவுலுடைய அனுபவம் இப்படியாக இருந்தது. இப்படி நாம் செய்வோமானால் நம் ஜெபம் கேட்கப்பட்டதற்கு அநேகர் கூறும் சாட்சி நம்மை இன்னும் உற்சாகப்படுத்தும். கிறிஸ்தவ மார்க்கமே பிறருக்காக அதிகமாக ஜெபிக்க வேண்டுமென்பதே ஆகும்.

11.02.24 ஞாயிறு : எபிரெயர் 11:15 தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. விட்டு வந்த தேசம் என்றால் பின்வாங்கிப்போன வாழ்க்கையாகும். அந்த வாழ்க்கையை நாம் ஒருக்காலும் நினைக்கக்கூடாது. தேவனுக்கு நன்றி மாத்திரம் நாம் கூற வேண்டும். இப்படிச் செய்தால் இன்னும் அதிக கிருபையை தேவன் தருவார். கானான் தேசத்தை சுற்றிப்பார்க்கப் போனவர்கள் பத்து பேர். பழைய தேசத்தை நினைத்து அழிந்து போனார்கள்.

12.02.24 திங்கள் : யாக்கோபு 5:13 உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன். இந்த வசனத்தின்படி நம்முடைய வாழ்க்கை இருக்க வேண்டும். ஏனென்றால் துன்பப்பட்டவர்களுக்கு நாம் ஜெப ஊழியம் செய்யும் போது அது அவர்களுக்கு விடுதலையைக் கொண்டுவரும். பேதுருவுடைய வல்லமையுள்ள வார்த்தையைக் கேட்ட ஐனேயா தன்னுடைய வியாதிப் படுக்கையிலிருந்து விடுதலை பெற்றான். நீங்கள் ஜெபிக்கும் போது பிறருக்கு அற்புதங்கள் நடக்கும்.

13.02.24 செவ்வாய் : I பேதுரு 4:18 நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான். இரட்சிக்கப்பட்ட வாழ்க்கையை தேவன் நம் அனைவருக்கும் கொடுத்துள்ளார். இதை மிக கவனமாக வளர்த்து வர வேண்டும். ஏனென்றால் நீதிமான்களே கடைசி நேரத்தில் விழக்கூடிய வாய்ப்பை பிசாசு அவர்களுக்குக் கொடுப்பான். அதில் விழுந்துவிடாதபடி தாவீதைப்போல கவனமுடையவர்களாகவும், சவுல் ராஜாவைப் போல கவனக்குறைவாகவும் வாழாதபடி இன்னும் விழிப்புள்ளவர்களாக மாற வேண்டும்.

14.02.24 புதன் : II பேதுரு 3:14 ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். நமக்கு தேவன் தந்திருக்கின்ற நேரங்களையும், காலங்களையும், சமயங்களையும் செலவு பண்ணுவதில் இன்னும் கவனம் நமக்குத் தேவை. தானியேல் பெரிய பொறுப்பில் இருந்தாலும் தினசரி மூன்று வேளை சரியான இடத்திலே ஜெபித்தது போல நம்முடைய காரிங்களையும் செய்ய வேண்டும்.

15.02.24 வியாழன் : I யோவான் 2:15 உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; உலகத்தில் அன்புக்கூர ஆரம்பித்தால் அந்த உலகம் நம்மை இழுத்துக்கொண்டு போய்விடும். திரும்பி எழுந்து வர இயலாது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நமக்கு இருக்குமானால் மிகுந்த ஜெபத்தோடு வெளியே வர வேண்டும். சீடர்களில் அநேகர் ஆரம்ப காலத்தில் இப்படிதான் காணப்பட்டார்கள். ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்ற பின்பு, முற்றிலும் மாறிவிட்டார்கள். இந்த முழுமையான மாற்றம் நமக்கு இன்னும் அதிகம் தேவை.

16.02.24 வெள்ளி : II யோவான் 1:7 மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக் கிறிஸ்துவுமாயிருக்கிறான். இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவர்கள் நம்மோடு ஊழியம் செய்வார்களானால் அவர்களை விட்டு நாம் விலகிக் கொள்ள வேண்டும். இந்த தெளிந்த அறிவு பவுல் பெற்றுக் கொண்டது போல நம்முடைய பிள்ளைகளும் இந்த விஷயத்தில் கவனமாய் இருக்க வேண்டும்.

17.02.24 சனி : III யோவான் 1:6 அவர்கள் உன்னுடைய அன்பைக் குறித்துச் சபைக்குமுன்பாகச் சாட்சி சொன்னார்கள். அநேகர் கூடி வரும் சபையில் சாட்சி சொல்லுவது மிகவும் நல்லது. ஆனால் அந்த சாட்சி சத்தியத்தின்படி இருக்க வேண்டும். 120பேர் கூடி ஜெபித்த இடத்தில் பேதுரு நின்று சாட்சியுடன் அந்த ஊழியத்தை

நிறைவேற்றினார். பரிசுத்த ஆவியை சீடர்கள் பெற்றுக் கொண்டார்கள். அதுபோல நாமும் சாட்சியுள்ள ஐக்கியத்துடன் இணைந்து கொண்டு அதை நடத்தும் கிருபையையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

18.02.24 ஞாயிறு : யூதா 1:3 பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாயக் கண்டது. தேவன் நமக்கு கிருபையாக விசுவாசத்தைக் கொடுத்துள்ளார். அந்த விசுவாசத்தை நாம் உறுதியாக பற்றிக்கொள்ள வேண்டும். நிற்பதும், பின்பு விழுவதுமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நாம் விலக வேண்டும். குணமடைந்த குஷ்டரோகிகளில் 9 பேர் விசுவாசத்தில் விழுந்துபோனவர்களாக மாறினார்கள்.

19.02.24 திங்கள் : வெளிப்படுத்தல் 22:3 இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். நாம் வாழும் உலகம் சாபம் நிறைந்தது. ஆனால் தேவன் நமக்கு ஆயத்தம் பண்ணின நகரம் பரிசுத்தமான பரலோக ராஜ்ஜியமாகும். இந்த ராஜ்ஜியத்தை ஏனோக்கு, எலியா ஆகியோர் விசேஷமாக பெற்றுக் கொண்டார்கள். நாமும் அந்த ராஜ்ஜியம் சென்றடைய அனுதினமும் ஆயத்தமாக வேண்டும். திருடன் வருகிற விதமாக யாரும் அறியாத வேளையில் இயேசு சீக்கிரம் வருகிறார்.

20.02.24 செவ்வாய் : ஆதியாகமம் 6:22 நோவா அப்படியே, செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான். நோவாவின் நாட்களில் நடந்ததுப்போல மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும் என்று வேதம் கூறுகின்றது. நமக்கும் தேவன் கொடுத்த கட்டளைகளின்படி நாம் வாழ வேண்டும். அப்போது நம் மூலமாக அநேகர் தேவ ராஜ்ஜியம் சேரவும், அநேகரை ஆயத்தப்படுத்தவும் வேண்டும். நோவாவைப்போல கர்த்தருடைய கண்களில் நமக்கு தயவு கிடைக்க வேண்டும்.

21.02.24 புதன் : யாத்திராகமம் 14:14 கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள். மோசே மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு இந்த வாக்கை கொடுத்து வழி நடத்தினார். அதுபோல இன்றைக்கு நாம் அனுபவிக்கிற போராட்டங்களில் கர்த்தர் நமக்காக யுத்தம் செய்யப் போகிறார். இறுதியில் நிறைவான வெற்றியை இஸ்ரவேல் ஜனங்கள் கண்டுகொண்டது போல நாம் அனைவரும் காண இருக்கின்றோம். வார்த்தைகளை வைத்து ஜெபிப்பது மிகவும் நல்லது. நமக்கு நிச்சயம் ஜெயம் உண்டு, தோல்வி கிடையாது.

22.02.24 வியாழன் : லேவியராகமம் 25:55 இஸ்ரவேல் புத்திரர் என் ஊழியக்காரர்; அவர்கள் நான் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின என் ஊழியக்காரரே; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். நம் அனைவரையும் ஒரு ஊழியக்காரராகவே வேதம் கூறுகின்றது. நாம் எந்த சூழ்நிலையில் தற்போது இருந்தாலும் நம்மை ஊழியக்காரராகவே எண்ணி ஜெபிக்கும் போது தேவன் ஏற்ற சூழ்நிலையை நமக்குத் தருவார். யாரும் இதுவரை செய்யாத ஊழியத்தை நீங்கள் செய்யப்போகின்றீர்கள். இது ஆண்டவருடைய உறுதியான வாக்கு.

23.02.24 வெள்ளி : எண்ணாகமம் 12:2 கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக் கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். கர்த்தர் அதைக் கேட்டார். யாருக்கும் விரோதமான வார்த்தைகளை நாம் யாவரும் கூறக்கூடாது மோசேக்கு விரோதமாக ஆரோனும், மிரியாமும் பேசின வார்த்தைகளை கர்த்தர் கடிந்து கொண்டார். ஒருவேளை நம்மை யாராவது குறைவாகப் பேசினாலும், நாம் பதிலுக்குப் பதில் பேசாமல் அமைதி காக்க வேண்டும். பிரச்சனையைத் தீர்க்க தேவனால் கூடும்.

24.02.24 சனி : உபாகமம் 1:11 நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக. இந்த வார்த்தையின்படி நம்முடைய சபைகளும், ஊழியமும் விருத்தியடையப் போகின்றது. வித்தியாசமான சூழ்நிலையை பாராமல் வார்த்தையை மாத்திரம் விசுவாசித்து இன்னும் அதிகமாக கூடி ஜெபத்திலே தரித்திருப்போம். கர்த்தர் நின்று ஆபிரகாமை ஆசீர்வதித்ததைப்போல நம்மையும் ஆசீர்வதிப்பார்.

25.02.24 ஞாயிறு : யோசுவா 3:1 அதிகாலமே யோசுவா எழுந்திருந்த பின்பு, அவனும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் சித்தீமிலிருந்து பிரயாணம் பண்ணி, யோர்தான்மட்டும் வந்து, அதைக் கடந்துபோகுமுன்னே அங்கே இராத்தங்கினார்கள். யோர்தான் ஆற்றை கடப்பதற்காக யோசுவா இத்தனை விதமான முன் ஆயத்தங்களை செய்ததுபோல ஆண்டவர் நம் கையில் கொடுத்த பொறுப்புகளை நிறைவேற்ற தேவ ஞானத்துடன் முன் ஆயத்தங்களை நிறைவாக செய்யும்போது நமக்கு முழுமையான ஜெயம் கிடைக்கும்.

26.02.24 திங்கள் : நியாயாதிபதிகள் 2:13 அவர்கள் கர்த்தரை விட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள். சரியான ஆவிக்குரிய தலைவர்கள் இல்லாத போது ஜனங்கள் கர்த்தரை விட்டு விலகி அந்நிய

தேவர்களைப் பற்றிக் கொண்டார்கள். நாம் அனைவரும் ஆவிக்குரிய தலைவர்களாக மாற வேண்டுமே தவிர ஜனங்கள் இடறுவதற்கு ஒரு காரணமாய் வாழ்ந்துவிடக்கூடாது. அனுதினமும் யோசுவாவைப்போல நம்மை பரிசுத்தப்படுத்தி கர்த்தருடைய ஊழியத்தை செய்வோம். நிறைவான பலனை ஆண்டவர் தருவார்.

27.02.24 செவ்வாய் : ரூத் 2:4 அப்பொழுது போவாஸ் பெத்லெகேமிலிருந்து வந்து; அறுக்கிறவர்களைப் பார்த்து: கர்த்தர் உங்களோடே இருப்பாராக என்றான்; அதற்கு அவர்கள்: கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக என்றார்கள். இந்த வசனத்தில் வேலை கொடுக்கிற எஜமானும், வேலை செய்கிற ஆட்களும், எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த மாதிரியான வாழ்க்கை நம்மிலே காணப்பட வேண்டும். அப்போது நம் முயற்சிகளைக் கர்த்தர் ஆசீர்வதிக்கத் தொடங்குவார்.

28.02.24 புதன் : I சாமுவேல் 2:18 சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடை செய்தான். சாமுவேல் ஆரம்ப கால ஊழியத்தை சரியாய் செய்தபடியால் அவருடைய ஜீவ நாட்கள் வரைக்கும் அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்கினார். அதுபோல நம்முடைய குடும்பத்தார் எல்லாரும் அடிப்படை சத்தியங்களை விட்டுவிடாமல் பணிவிடை வேலையை உற்சாகமாய் செய்யும் போது தேவன் நம்மை இறுதிவரை அற்புதமாக நடத்துவார்.

29.02.24 வியாழன் : II சாமுவேல் 22:1 கர்த்தர் தாவீதை அவனுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும், சவுலின் கைக்கும், நீங்கலாக்கி விடுவித்தபோது, அவன் கர்த்தருக்கு முன்பாகப் பாடின பாட்டு. இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்ட பாடல்கள் அனைத்தும் தாவீதின் வெற்றிப் பாடலாகும். நாம் அனைவரும் தாவீதைப் போல நமக்கு கிடைத்த ஆசீர்வாதங்களை சொல்லி வெற்றி பாடல் பாட வேண்டும். அப்போது தாவீது மேல் இறங்கின அபிஷேகம் நம்மேலும், பலமாய் இறங்கி அற்புதமாக நம்மை வழி நடத்தும்.

## 2024 புதுவருட வாக்குத்தத்த ஜெபம் - அறிக்கை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, தேவகிருபையால், புத்தாண்டில் வாக்குத்தத்த ஜெபத்தின் ஆசீர்வாதத்திற்காக கடந்த ஆண்டே ஜெபிக்கத் தொடங்கினோம். ஜெபத்தைக் கேட்ட தேவன், புதுவருடத்தை காணச் செய்தார். 01-01-2024, திங்கள்கிழமை மதியம் 2.30 மணிக்கு, சுரண்டையில் உள்ள நமது ஜெபக்கூடாரத்தில் வைத்து புதுவருட வாக்குத்தத்த ஜெபம் நடைபெற்றது. அநேகர் ஜெபத்தில் கலந்து கொண்டு கூடி ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார். கலந்து கொண்டவர்களில் சிலர் கடந்த ஆண்டின் சாட்சிகளை பகிர்ந்து கொண்டார்கள். பின்பு தேவன் தரும் புத்தாண்டு வாக்குத்தத்த வசனமும், புத்தாண்டு எச்சரிப்பு வசனமும் யாவரும் ஜெபத்துடன் பெற்றுக் கொண்டனர். வசனங்கள் யாவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. பின்பு பிலிப்பியர் 2:14ம் வசனத்தின்படி புத்தாண்டு செய்தியை தேவன் தந்தார். வீணான ஓட்டங்களை நிறுத்தி உலகத்தில் சுடர்களைப் போல பிரகாசிக்க வசனத்தைப் பிடித்துக் கொள்ள யாவரும் ஒப்புக் கொடுத்து ஜெபித்து, ஸ்தோத்திரத்துடன் வாக்குத்தத்தம் ஜெபம் ஆசீர்வாதமாய் நிறைவேறியது. தேவ நாமம் மகிமைப்பட்டது. தொடர்ந்து ஐக்கியத்திற்காக ஜெபிப்போம்.

## டிசம்பர், ஜனவரி மாதங்களின் ஊழியப் பகிர்மானங்கள்:

1. 03-12-23 - மருதுபுரம் ஆலய ஆராதனை
2. 15,16,17-12-23 - வாகைக்குளம், கன்வென்ஷன்
3. 23-12-2022 - காமராஜ் நகர், கன்வென்ஷன்
4. 24-12-2022 - கடையம் ஆலயம் ஆராதனை
5. 25-12-2022 - கிறிஸ்மஸ் ஆராதனை – கீழப்பாவூர், சுப்பிரமணியபுரம்
6. 29-12-23 – ராமகிருஷ்ணாபுரம் – பெண்கள் கூட்டம், சிதம்பராபுரம் – ஆண்கள் எழுப்புதல் முகாம்
7. 30-12-23 – மடத்தச்சம்பாடு – ஸ்தோத்திர ஜெபம்
8. 31-12-23 – சிதம்பராபுரம் – ஸ்தோத்திர ஜெபம்

1. 01-01-24 – குறும்பாலப்பேரி – புதுவருட ஆராதனை
2. 01-01-24 – மதியம் 2.30 மணி – புத்தாண்டு வாக்குத்த ஜெபம்
3. 03-21-24 – கடைசிக்கால அபிஷேகம் ஜெபம்
4. 05-01-24 – பங்களாச்சுரண்டை முன் இரவு ஜெபம்
5. 07-01-24 – ஷாலோம் பள்ளி – விசுவாசிகளின் ஐக்கிய ஜெபம்

தேவனுக்கே மகிமை

பெண்கள் பகுதி

# புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக்கட்டுகிறாள் - நீதி. 14:1 a

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, இந்த வருடத்தின் இரண்டாம் மாதத்தைக் காணச் செய்த தேவனுக்கு நன்றி கூறுகிறேன். இந்த மாதத்திலே புத்தியுள்ள ஸ்திரீயாக செயல்பட்டு தன் பட்டணத்தையே காத்த ஸ்திரீயைப் பற்றி நாம் தியானிப்போம்.

தேசத்திலே அநேக புத்தியுள்ள ஸ்திரீகள் உண்டு. ஆனாலும் பெயர்சொல்லப்படாத ஒரு ஸ்திரீ எவ்வாறு தன் பட்டணத்தைக் காத்தாள். அவளிடம் காணப்பட்ட குணநலன்களையும் பார்ப்போம். II சாமுவேல் 20:15 முதல் 20 வரைக்கும் உள்ள வசனத்தில் அந்த ஸ்திரீயின் செயல்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஆபேலை யோவாபுடைய ஜனங்கள் முற்றுகையிட்டார்கள். அப்பட்டணத்தில் உள்ள ஒரு ஸ்திரீ யோவாபோடே புத்தியாய்ப் பேசி பிக்கிரியின் மகன் சேபாவின் தலையை வெட்டி யோவாபினிடத்தில் போட்டாள். யோவாபும் அவன் ஜனங்களும், ஆபேல் பட்டணத்தை அழிக்காதபடிக்கு எருசலேமிற்குத் திரும்பிப் போய்விட்டார்கள். ஆபேல் பட்டணம் ஒரு புத்தியுள்ள ஸ்திரீயினால் காக்கப்பட்டது.

### முதலாவதாக புத்தியுள்ள ஸ்திரீ: II சாமு.20:16

அப்பொழுது புத்தியுள்ள ஒரு ஸ்திரீ பட்டணத்திலிருந்து சத்தமிட்டு கேளுங்கள், கேளுங்கள்; நான் யோவாபோடே பேசவேண்டும். அவரை இங்கே கிட்ட வரச்செல்லுங்கள் என்றாள். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்று ஞானி சொல்கிறார். அதுபோல ஆபேல் பட்டணத்தில் வாழ்ந்த ஒரு ஸ்திரீ புத்தியாய்ப் பேசி துரிதமாக செயல்பட்டதினால் அவள் வாழ்ந்த ஆபேல் பட்டணம் காக்கப்பட்டது என்று வாசிக்கின்றோம். நாமும் இந்த ஸ்திரீயைப் போல புத்தியுள்ள ஸ்திரீயாக எல்லா இடங்களிலும் செயல்படவேண்டும். அப்படி வாழ்ந்தால் நம் வீடு, தொழில், ஊழியம் ஆசீர்வதிக்கப்படும். இதற்கு புத்தியுள்ள இந்த ஸ்திரீயைப் போல நாம் வாழ வேண்டும். பெண்களாகிய நாம் எல்லாவற்றிலும் புத்தியாய் செயல்பட்டால் நம் வீடும், பட்டணமும், நாமும் காக்கப்படுவோம்.

### இரண்டாவதாக சரியான நபரிடம் தைரியமாய் பேசிய ஸ்திரீ: II சாமு.20:17-21

யோவாபும் அவன் ஜனங்களும் பட்டணத்தை அழிக்க எத்தனம் பண்ணினார்கள். அதற்கு அந்த ஸ்திரீ நான் யோவாபோடே பேச வேண்டும் என்றாள். யோவாபோடே பேசினாள். யோவாப் தாவீதுக்கு விரோதமாக செயல்பட்ட பிக்கிரியின் மகன் சேபாவை எங்களிடம் ஒப்புக் கொடுத்துவிட்டால் நாங்கள் போய்விடுவோம் என்றான். உடனே அந்த ஸ்திரீ பட்டணத்தின் மனுஷரோடே பேசி, துரிதமாகச் செயல்பட்டு பிக்கிரியின் குமாரனாகிய சோபாவின் தலையை வெட்டி யோவாபினிடத்தில் போட்டாள். அவர்கள் எக்காளம் ஊதி அப்பட்டணத்தை முற்றுகைப் போடுவதை விட்டுப் போய்விட்டார்கள். நாமும் நம் வாழ்வில் ஏதாவது பிரச்சனை வந்தால் அது யார் மூலம் வந்தது என இனம் கண்டு அதை வளர்க்காதபடிக்கு முதலாவது தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பின்னர் சரியான நபரிடம் ஞானமாய் பேசி அந்தப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டும். அதற்கு ஞானமும், அந்த ஸ்திரீயைப் போல தைரியமும் வேண்டும். அழிக்கும்படிக்கு யோவாப் வந்து சூழ்ந்து நின்ற பட்டணம் சரியான நபரிடம் தைரியமாக அந்த ஸ்திரீ பேசினதினால் பாதுகாக்கப்பட்டது. நாமும் நம் எல்லாச் சூழ்நிலைகளிலும் நம் குடும்பம், தொழில், பணி, ஊழியம் பாதுகாக்கப்பட புத்தியுள்ள ஸ்திரீயாய் தைரியமாய்ச் பேசி வெற்றி பெற வேண்டும். பெண்கள் குடும்பத்தில் சரியான நபரிடம் பேசி வெற்றி பெற வேண்டும். ஆமென்.

### மூன்றாவதாக பிசாசிற்கு எதிர்த்து நின்ற ஸ்திரீ: II சாமு.20:11

பிக்கிரியின் குமாரன் சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனுஷன் ஒருவன் இருந்தான். அவன் தாவீதுக்கு விரோதமாகப் பேசிக் கொண்டிருந்தான். சேபா ஆண்டவரின் பிள்ளைகளுக்கு விரோதமாகச் செயல்படும் பேலியாளின் மகன் என்பதை அறிந்து ஸ்திரீ அவனை அழிக்கப் பட்டணத்தின் மக்களோடு புத்தியாய் பேசி அவன் தலையை எடுத்து பட்டணத்தின் மதிலிலிருந்து யோவாபிடம் போட்டாள். யுத்தம் நின்று அமைதி திரும்பியது. பிசாசின் மனுஷரிடம் பேசவோ, ஐக்கியம் வைக்கவோ கூடாது. பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள், பிசாசு பேச இடங்கொடாதிருங்கள் என்று வேதம் சொல்கிறது. நம் குடும்ப ஐக்கியம் கெடுவதற்கு ஏதாவது மனுஷர்கள் செயல்பட்டால் நாம் அதற்கு உடன்படக்கூடாது அந்த ஸ்திரீ அந்த பேலியாளின் மனுஷரை அழித்தது போல நாமும் பிசாசின் தந்திரங்களையும், அதன் கிரியைகளையும் அழிக்க வேண்டும். பிசாசு நம்மை இலகுவாக வஞ்சித்து விடுவான். ஏவாளை ஏதேன் தோட்டத்தில் வஞ்சித்த பிசாசானவன் இன்றும் நம்மை வஞ்சிக்க வகை தேடி சுற்றி வருகிறான். அவன் வலையில் விழாதபடிக்கு எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். பெண்களாகிய நாம் நன்றாக ஜெபித்து வேதம் வாசித்து பிசாசை எதிர்த்து செயல்படுவோம். பிசாசின் கிரியை அழிக்கப்பட்டு நாம் ஜெயம் பெறுவோம். ஆமென்.

புத்தியுள்ள அந்த ஸ்திரீயைப் போல புத்தியாய்ப்பேசி நம் குடும்பத்தை பாதுகாப்போம். நம் பிரச்சனையை சரியான நபரிடம் தைரியமாக எடுத்துச் சொல்லி ஜெயம் பெறுவோம். பிசாசின் வஞ்சக செயல்களுக்கும், எண்ணங்களுக்கும் இடங்கொடாமல் எதிர்த்து நின்று வெற்றியும், ஜெயமும் பெறுவோம். ஆமென். அல்லேலூயா.

எழுப்புதல் ஜெப ஐக்கியம், சுரண்டை.

# வேதாகமம் கூறும் கடைசிக்கால சம்பவங்கள்

## ஆசியாவிலிருக்கிற சிமிர்னா சபை. வெளி. 2:8-11

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, கடைசிக்காலத்தில் ஆசியாவிலிருக்கிற சபையில் இரண்டாவது சபையாகிய சிமிர்னா சபையின் நிலையைக் குறித்து வெளி.2:8-11 வரை உள்ள வசனங்களை நாம் ஜெபத்துடன் தியானிக்கும் போது, நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறோம் என்றும் இனிமேல் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்பதையும் தெளிவாய் அறிய முடிகின்றது.

உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும் நான் அறிவேன் என்று ஆவியானவர் கூறுகின்றார். ஆவியானவர் நம்முடைய கிரியைகளை அறிந்திருக்கிறபடியால் நாம் நம்முடைய காரியங்களை தேவனுக்குப் பிரியமாய் மாற்றிக் கொள்ள வேண்டும். மேலும் நமக்கு இருக்கும் உபத்திரவங்களையும், அவைகளை நாம் கடந்து வர வேண்டிய வழிகளையும், ஆவியானவர் அறிந்திருக்கிறார். நமக்கு இருக்கும் தரித்திரத்தையும் ஆவியானவர் அறிந்திருக்கிறபடியால், நாம் அதிலிருந்து தப்பிக்கொள்ளும் போக்கையும் ஆவியானவர் அறிந்திருக்கிறார். ஆகவே நமக்கு நிச்சயம் ஜெயம் உண்டு. இன்னும் ஆவியானவர் அறிந்திருக்கிறது என்னவென்றால், தங்களை யூதர் என்று சொல்லியும், யூதராய் இராமல் சாத்தானின் கூட்டமாய் நாம் இருக்கிறதையும் ஆவியானவர் அறிந்திருப்பதை வெளி.2:9ல் வாசிக்கின்றோம். நம்மில் உள்ள நிறைவு குறைவுகளை ஆவியானவர் அறிவார்.

மேலும் ஆவிக்குரியவர்களாகிய நமக்கு வரும் பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படக்கூடாது என்றும் வேதத்தில் வாசிக்கின்றோம். நாம் பாடுகளையும் அனுபவிக்கப் பிறந்தவர்கள் என்பதை உணர்ந்து, பாடுகளை ஜெயிக்க தேவ பெலனுக்காக ஜெபிக்க வேண்டும். பாடுகளுக்காக நாம் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, நாம் சோதிக்கப்படும் பொருட்டாக, பிசாசானவன் உங்களில் சிலரை காவலில் போடுவான் என்றும் நமக்கு வரவேண்டிய பாடுகளைக் குறித்து வேதம் கூறுகின்றது. மேலும், பத்து நாட்கள் உபத்திரவப்படுவீர்கள் என்றும், அந்த நாட்களில் நாம் உபத்திரவங்களை பொறுமையாய் சகிக்க வேண்டிய கிருபைகளை தேவன் தருவார். ஆகிலும் மரணபரியந்தம் உண்மையாயிரு என்றும், இவ்வாறு நாம் ஜீவித்தால், ஜீவகிரீடத்தை தேவன் நமக்குத் தருவார் என்றும் வெளி.2:10ம் வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். இவ்வாறு கூறும்போது, காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று கூறி, இதில் ஜெயம் கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்று நமக்கு வாக்குப் பண்ணுகிறார் (வெளி.2:11).

அன்பானவர்களே, அன்றைக்கு சபைக்கு வெளிப்பாடு கொடுத்த ஆவியானவர் இன்று நமது சபைக்கும், நமது குடும்பத்திற்கும், நமக்கும் இதே வெளிப்பாடு கொடுக்கின்றார். நாம் கண்டும் காணாதவர்கள் போல இருந்து விடாமல் ஆவியானவர் வார்த்தைக்கு செவி கொடுக்க வேண்டும். வெளி.2:9ல் வசனத்திபடி, நாம் ஐசுவரியவான்களாய் இருந்தும் இன்னும் தரித்திரம் ஏன் நமக்குள் இருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தால், ஆவியானவர் நம்முடைய குறைகளை உணர்த்திக் காட்டுவார். மேலும் வெளி.2:9ஐ தொடர்ந்து வாசிக்கும் போது, நாம் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று கூறினாலும், ஏன் சாத்தானுடைய கிரியைகள் நம்மிடம் காணப்படுகின்றது என்பதை ஆராய்ந்து பார்த்தால், ஆவியானவர் நம்முடைய குறைகளை இதிலும் வெளிப்படுத்துவார்.

வெளி. 2:10ம் வசனத்தை நாம் பார்க்கும் போது, நமக்கு வரும் பாடுகளைக் குறித்து பயப்படாமல் இருக்க, ஆவியின் அபிஷேகத்தை தேவனிடம் அதிகமாய் பெற்றுக் கொள்ள வேண்டும். அபிஷேகமே II தீமோத்தேயு 1:7ன்படி நமக்கு பயத்தைப் போக்கும். அதற்குப் பதிலாக பலத்தையும், அன்பையும், தெளிந்த புத்தியையும் நமக்கு தரும். ஆகவே, இந்த நாட்களில் கடைசிக் காலத்தில் தேவன் நமக்கு ஆயத்தம் செய்து வைத்திருக்கும் அபிஷேகத்திற்காய் இன்னும் அதிகமாய் ஜெபிக்க வேண்டும். குடும்பமாய், குழுவாய், சபையாய் ஜெபிக்கும் போது, நாம் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அந்த அபிஷேகம் எப்படிப்பட்டது என்று பார்க்கும்போது, I யோவான் 2:27ன்படி நாம் போக வேண்டிய சரியான பாதையை அவ்வப்போது நமக்கு வெளிப்படுத்தும். அபிஷேகம் எப்படி நடத்துகின்றதோ அதன்படி கீழ்ப்படிந்து நடக்கும்போது, நம்முடைய வாழ்க்கை எல்லாரைக்காட்டிலும் அனல் உள்ளதாய் மாறிவிடும்.

நீங்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றிருக்கிறீர்களா? அபிஷேகம் எனக்கு இருக்கிறது என்று கூறுவீர்களானால், இன்னும் கூடுதல் அபிஷேகத்திற்காக, வரங்களுக்காக, வல்லமைக்காக, ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும். அபிஷேகம் இல்லையென்றால் இனி தாமதம் செய்யாமல் உடனே அபிஷேகத்திற்காக ஜெபிக்க வேண்டும். அப்.19:6ம் வசனத்தின்படி, ஆவியின் அபிஷேகம் பெற்றுக் கொள்ள வேண்டும். இனி காலங்கள் நமக்கு சாதகமாய் இராது. இதுவே இரட்சண்ய நாள் நம்மை தேவ கரத்தில் ஒப்புக் கொடுப்போம். சிமிர்னா சபைக்கு உரிய உபதேசம் நமக்கும் கிடைக்கும். நாம் கர்த்தரின் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட, அபிஷேகத்திற்கும், தேவ வசனத்திற்கும், ஜெபத்திற்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்போம். ஆவியானவர் நம்மை ஆளுகை செய்வார். ஆமென்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

# 45-வது ஆண்கள் தியான முகாம்

இடம் : ஜெப ஐக்கிய ஜெபக்கூடாரம், சுரண்டை

நாள் : 2024, மே மாதம் 2,3,4
வியாழன், வெள்ளி, சனி

தேவ செய்தி :

**Bro. T.சாம் அற்புதராஜ்**

**Bro. P.D.ஞானப்பிரகாசம்**

**மற்றும் ஐக்கிய ஊழியர்கள்**

**ஆண்கள் ஜெபத்துடன்
இம்முகாமில் கலந்து கொள்ள
அன்புடன் அழைக்கின்றோம்.**

இம்மாதத்தில் வழக்கமான ஊழியங்களும், சிறப்பான ஊழியங்களும் உண்டு. கர்த்தர் நடத்த ஜெபியுங்கள்.

## குறிப்பு :

1. ஐக்கியத்திற்காய் அதிகம் ஜெபித்து, ஊழியத்தில் பங்கு பெறுங்கள்.
2. பத்திரிக்கையை அநேகருக்கு அறிமுகம் செய்யுங்கள்.
3. உங்கள் செல்போன் எண்ணை ஐக்கியத்திற்குத் தெரிவியுங்கள்.
4. உங்கள் பிரச்சனைகளுக்காக ஜெபிப்போம்
5. உங்கள் ஜெபம் ஐக்கியத்திற்கு தினமும் தேவை.
6. தேவன் உங்களை அழைத்தால் ஐக்கிய ஊழியங்களை உங்கள் பகுதியில் செய்யுங்கள்.
7. இம்மாதம் அனைத்து ஊழியங்களும் அபிஷேகத்துடன் நடைபெறும்.
8. ஐக்கியத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவர்கள் பிறரையும் இரட்சிப்பிற்குள் வழி நடத்துங்கள்.
9. எழுப்புதல் TV என்ற சேனல் முகவரியில் YOU TUBE ஊழியம் நடைபெற்று வருகின்றது.

**தொடர்புக்கு:**

**90255 53614, 99429 50132**

## நடப்புச் செய்திகள்.

1. இந்திய விண்வெளி ஆய்வு நிறுவன விஞ்ஞானிகள் இந்த புத்தாண்டில் முதலாவது ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளனர். ''எக்ஸ்போசாட்'' உட்பட செயற்கைக்கோள்களை சுமந்தபடி பிஎஸ்எல்வி சி-58 ராக்கெட் நேற்று விண்ணில் ஏவப்பட்டது.
2. ஜப்பானில் 7.6 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதால், புத்தாண்டின் முதல் நாளிலேயே கடும் பதற்றம் ஏற்பட்டது.
3. ஆஸ்திரேலியாவில் நடைபெறும் பிக் பாஷ் லீக் (ஆண்கள்) டி 20 தொடரில் சிட்னி தண்டர் அணியுடன் மோதிய ஹோபர்ட் ஹரிகேன்ஸ் 7 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது.
4. தார்மீக காரணங்களின் அடிப்படையிலேயே இம்ரான்கானின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.
5. கடந்த 2017ல் மாணவர் விசாவில் கனடாவுக்கு சென்ற சத்விந்தர் சிங் அல்லது சத்விந்தர் ஜித் சிங் என்ற கோல்டி பிரார் ரவுடி லாரன்ஸ் பிஷ்னோயின் நெருங்கிய கூட்டாளி ஆவார்.
6. புத்தாண்டின் அதிகாலையில் உக்ரைனின் பல நகரங்களின் மீது ரஷ்யா டிரோன்களை ஏவி தாக்குதல் நடத்தியதில் சிறுவன் உயிரிழந்தான். இதற்கு பதிலடியாக உக்ரைன் நடத்திய தாக்குதலில், 5 பேர் பலியாயினர்.
7. சீனா, அமெரிக்கா இடையேயான இருதரப்பு உறவின் 45ம் ஆண்டு நிறைவையொட்டி, இரு நாட்டு தலைவர்களும் பரஸ்பரம் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.
8. வங்கதேசத்தை சேர்ந்த பொருளாதார நிபுணர் டாக்டர் முகமது யூனுஸ் (83) கடந்த 1983ம் ஆண்டு கிராமீன் வங்கி என்ற பெயரில் தொடங்கிய நிறுவனம் மூலம் பலருக்கும் கடனுதவிகளை செய்து வந்தார். இதன் மூலம் அவரது வங்கி சிறு கடன்களுக்கான வீடு என பாராட்ட பெற்றது. வறுமைக்கு எதிரான பிரசாரத்துக்காக கடந்த 2006ம் ஆண்டு அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
9. மக்களவைத் தேர்தலை 7 கட்டங்களாக நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.
10. 5வது முறையாக, வங்க தேச பிரதமராக ஷேக் ஹசீனா பதவி ஏற்றுள்ளார்.

## "உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே..." ரோமர் 1:8

## உலகமெங்கும் அற்புத அடையாளங்கள் தேவனால் செய்யப்பட...

1. அப்.28:5 அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறிப்போட்டு, ஒரு தீங்கும் அடையாதிருந்தான். உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் இப்படிப்பட்ட சோதனைக்கு எதிர்த்து நிற்கவும், தேவன் அற்புதமாய் ஜனங்களை பாதுகாக்கவும், பராமரிக்கவும் ஜெபிப்போம்.
2. அப்.16:30 அவர்களை வெளியே அழைத்து வந்து, ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும். இந்த நாட்களில் இப்படிப்பட்ட பகிரங்கமான தேவனின் கிரியை உலகமெங்கும் சீக்கிரம் நடைபெற ஜெபிப்போம்.
3. அப்.12:7 அப்பொழுது கர்த்தருடைய தூதன், அங்கே வந்து நின்றான். அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. உடனே சங்கிலிகள் கையிலிருந்து விழுந்தது. இப்படிப்பட்ட எழுப்புதல் சீக்கிரம் உலகமெங்கும் உண்டாக ஜெபிப்போம்.
4. அப்.9:40 அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து, பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள். இன்றும் இப்படிப்பட கிரியைகள் நடக்கவும், மரித்தவர்கள் இயேவின் நாமத்தில் எழும்பவும், தேவ பயம் யாவருக்கும் உண்டாகவும் ஜெபிப்போம்.
5. அப்.8:8 அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. பிலிப்பு மூலம் அந்நாட்களில் நடந்த அற்புதங்கள் இன்னும் நடக்கவும், நம்முடைய விசுவாசம் இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யவும், எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம.
6. அப்.2:4 அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, வெவ்வெறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். இப்படிப்பட்ட ஆவியின் நிரப்புதல் யாவருக்கும் உண்டாகவும், அதற்கு உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் ஆயத்தப்படவும் ஜெபிப்போம்.
7. எசேக்கியேல் 36:37 மந்தை பெருகிறது போல் அவர்களில் மனிதரைப் பெருகப்பண்ணுவேன். உலகமெங்கும் உள்ள ஜனங்களுக்கு ஆவிக்குரிய இருதயம் இந்நாட்களில் உண்டாகவும், அதற்குரிய ஜெபங்கள் யாவரிடமும் காணப்பட ஜெபிப்போம்.
8. எசேக்கியேல் 37:5 இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப் பண்ணுவேன். உலகமெங்கும் பரிசுத்த ஆவியின் கிரியைகள் பலமாய் வெளிப்படவும், அநேகர் தேவபணியை முழுநேரமாய்ச் செய்யவும் ஜெபிப்போம்.
9. எசேக்கியேல் 38:7 நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து. நீ அவர்களுக்குக் காவலானாயிரு. இவ்வசனத்தின்படி, அனைத்து ஊழியர்களும் தங்களை இன்னும் தகுதிப்படுத்த ஜெபிப்போம்.
10. எசேக்கியேல் 39:29 நான் இஸ்ரவேல் வம்சத்தார் மேல் என் ஆவியை ஊற்றினபடியால் என் முகத்தை இனி அவர்களுக்கு மறைக்க மாட்டேன். உலகமெங்கும் உள்ள விசுவாசிகள் மேல் தேவ ஆவி இறங்கி அவர்கள் தேவனைக் காணவும் ஜெபிப்போம்.
11. எசேக்கியேல் 38:23 இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப் பண்ணி... இந்த வசனம் உலகமெங்கும் கிரியை செய்யவும் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.
12. எசேக்கியேல் 2:1 அவர் என்னை நோக்கி, மனுபுத்திரனே, உன் காலூன்றி நில். உன்னுடனே பேசுவேன் என்றார். இந்த வசனத்தின்படி உலகமெங்கும் உள்ள அனைத்து விசுவாசிகளுக்கும் நடக்கவும், தேவனின் வார்த்தைகள் யாவருக்கும் கிடைக்கவும் ஜெபிப்போம்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம்,** சுரண்டை.

## நமக்கு வரக்கூடிய தீங்குகளை வராமல் காக்கும் அபிஷேகம் - 133 (அப். 18:10)

**கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே,** இயேசுவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள் கூறுகின்றேன். நாம் அனைவரும் தினமும் அபிஷேகம் பெற்றுக் கொண்டு, அதன்படி நடக்க வேண்டும். அப்படிச் செய்யும் போது, நமக்கு அனேகர் தீங்கு செய்ய நினைத்தாலும், அதற்கு நம்மை தேவன் பாதுகாத்துக் கொள்ளுவார். அந்த தீங்கு நம்மை சேதப்படுத்தாமல், நம்மை விட்டு கடந்து போய் விடும். அப்படி நடப்பதற்கு நாம் ஜெபிக்கும் போது, கர்த்தர் சரியான நேரத்தில் ஓர் அற்புதம் செய்து நம்மை வழி நடத்துவார். நான் உன்னுடனேகூட இருக்கிறேன். உனக்குத் தீங்கு செய்யும்படி, ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை என்று வேதம் கூறுகின்றது அப்.18:10

வேதத்தின் அடிப்படையில் அபிஷேகம் பெற்றவர்களுக்கு வரயிருந்த தீமைகளையும், அதற்கு அவர்கள் தப்பிப்போக, அவர்களில் இருந்த அபிஷேகம் எப்படியெல்லாம் அவர்களை காத்தது என்று தியானிப்போம். அப்படி தியானிக்கும் போது, நமக்குள் இருக்கும் அபிஷேகம் நம்மை எல்லா தீமைகளுக்கும் விலக்கிப் பாதுகாக்கும் என்று விசுவாச தைரியம் நமக்குக் கிடைக்கும். ஆமென்.

**1. தாவீதின் அபிஷேகம் சவுலின் கைக்கு பாதுகாத்தது:** அப்பொழுது சாமுவேல் தைலக் கொம்பை எடுத்து அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான். அந்நாட்முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார். இந்த அபிஷேகம் தாவீதை, பொல்லாத சவுலின் கைக்கு கடைசி மட்டும் விலக்கிக் காத்தது. அபிஷேகம் கிடைத்தவுடன் பல அற்புதங்கள் நமக்கு நடக்கும். அதே வேளையில் அநேகப் பாடுகளும் நம்மை தாக்கும். ஆனால் பாடுகள் நம்மை ஒன்றும் செய்யாது. உதாரணமாக தாவீது யுத்தத்தின் செய்திகளை விசாரித்து கொண்டிருக்கும் போது, அவனது சகோதரர்கள் அவனுக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்தார்கள். கோலியாத் எல்லாரையும் பயமுறுத்திக் கொண்டிருந்தான். பெண்கள் பாடின பாடல்களைக் கேட்டு, சவுல் ராஜா, தாவீதை அழிக்கத் திட்டமிடுகிறான். இப்படிப்பட்ட அநேக நெருக்கங்கள் தாவீதுக்கு வந்த போதிலும், தாவீதை ஒன்றும் மேற்கொள்ளவில்லை. யாரும் தாவீதுமேல் கைபோட முடியாமல் போய் விட்டது. அன்பானவர்களே, நீங்கள் எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும், அபிஷேகம் உங்களில் இருக்கும் போது, இறுதி வெற்றி நமக்கே கிடைக்க கர்த்தர் உதவி செய்வார். ஆகவே இக்கடைசிக் காலத்தில் பரிசுத்த ஆவியை யாவர் மீதும் தேவன் ஊற்றிக் கொண்டேயிருக்கிறார். இன்றே குடும்பமாய் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டு, ஊழியத்திலும், தொழில் செய்யும் இடங்களிலும் தேவன் நம்மோடு கூட இருந்து, இன்னும் அநேக ஆத்துமாக்களை இரட்சிக்க தேவன் பெலன் தருவார்.

**2. பவுலின் அபிஷேகம் எல்லா எதிர்ப்புகளையும் முறியடித்தது:** பவுல் அபிஷேகம் பெற்று ஊழியம் செய்யத் தொடங்கிய போது, அநேகர் அவரை ஊழியராக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எல்லாரும் பவுலின் பழைய வாழ்க்கையை நினைத்து, அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. கர்த்தர் பவுலை திடப்படுத்தி, நான் உன்னுடனேகூட இருக்கிறேன். உனக்குத் தீங்கு செய்யும்படி, ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை என்று (அப்.18:10) தேவன் பேசினார். இதுமட்டுமல்ல, மெலித்தா தீவில் அநேக இடையூறுகள் இருந்தபோதிலும், ஒரு தீங்கும் அவருக்கு ஏற்படாதபடி கர்த்தர் காத்துக் கொண்டார். பவுல் சந்தித்த சோதனை யாவும் எழுப்புதலாய் மாறிவிட்டது.

நமக்கும் அபிஷேகம் கிடைக்கும் போது, அனேகர் நமக்கு விரோதமாய் எழும்பினாலும், யாரும் நம்மை மேற்கொள்ள முடியாது. ஒருவேளை நீங்கள் பெற்றுக்கொண்ட அபிஷேகத்தை காத்துக் கொள்ள முடியவில்லையே என்று மனவேதனையில் இருக்கலாம். உங்கள் மனபாரத்தை கர்த்தர் அறிந்து உங்களுக்கு இரட்டிப்பான ஆவியின் வரத்தை எலிசா பெற்றுக் கொண்டது போல, உங்களுக்கும் தேவன் தருவார். நீங்கள் முன்னால் செய்த ஊழியத்தை விட இன்னும் சிறப்பான ஊழியத்தைச் செய்வீர்கள். ஒரு வேளை அபிஷேகம் இன்னும் கிடைக்காவிட்டால், தேவன் உங்கள் மேல் தம் ஆவியைப் பலமாய் ஊற்றபோகிறார்.

தரங்கம்பாடி என்ற இடத்தில் நடந்த ஜெபக்கூட்டத்தில், ஒரு ஊழியர் ஒருமுறை கலந்து கொண்டார். அவர்கள் அன்றைக்கு பரிசுத்த ஆவிக்காக ஜெபித்து அபிஷேகம் பெற்றுக் கொண்டார். சில நாள் கழித்து அவர் கூறின சாட்சி என்னவென்றால், தன்னுடைய ஜெபமும், ஊழியமும் மாறிவிட்டது. இப்போது நன்கு உற்சாகமாய் செயல்படுவதாயும், அதற்கு காரணம் அபிஷேகமே என்றும் கூறினார்கள். அன்பானவர்களே, ஊழியத்தில், குடும்பத்தில் சோர்பு இருக்குமானால் அபிஷேகத்தில் நிறைந்து ஜெபிப்போம். குறிப்பாக சாத்தான் கொண்டு வரும் ஆயுதங்கள் அழிந்து போய்விடும். நாம் எதைக்குறித்தும் கலங்காமல் வேதம் வாசித்து ஜெபம் செய்வோம். அப்போது யாராவது ஒருவர் நமக்கு தீங்கு செய்ய நினைத்தால், அபிஷேகம் நம்மைக் காத்துக் கொள்ளும். அப்போஸ்தலர்களை காத்த தேவன் நம்மையும் காப்பார். இனி வரும் நாட்கள் பொல்லாததாய் இருந்தாலும், கர்த்தர் நமக்குத் தந்த அபிஷேகத்தின் மூலம் ஆசீர்வாதமாய் நடத்தி தருவார். ஆவியானவர் காட்டும் பாதையில் செல்வோம். இம்மமாதமும், இவ்வருடமும் நமக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் தந்து வழி நடத்த தேவன் சித்தமாய் இருக்கிறார். இன்னும் அதிகம் ஜெபிப்போம்.

**எழுப்புதல் ஜெப ஐக்கியம், சுரண்டை.**

Registrar of Newspapers for India,
Registration 71982/98, New Delhi

TN/WPP-168/SR/2024-2026
Licenced to Post without prepayment
Posted at Surandai on 27th 28th of every month

Postal Registration Number of R.N.P,KOL /005/2024-2026
Date of Publication : January 26,2023
Date of Posting : January 27,2023 Posted at Surandai

# வேதத்தின் மகத்துவங்களில்... சில...

## "நன்மை செய்தோருக்கு ஏற்றகாலத்தில் கிடைக்கும் பலாபலன்" எஸ்தர் 6:10

இயேசு கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். நாம் அனுதினமும் தியானிக்கும் வேதாகமம் ஓர் மகத்துவமான புத்தகம். இந்த வேதத்தில் உள்ள வசனங்களை ஜெபத்துடன், நம் வாழ்க்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அதை நடைமுறைப் படுத்துவோமானால், மிகுந்த ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள முடியும். நாம் இம்மாதத்தில் எஸ்தரின் புஸ்தகத்தில், மொர்தெகாய் செய்த நன்மையான காரியத்தையும் ஏற்ற காலத்தில் அதன் மூலமாய் அவர் பெற்றுக் கொண்ட நன்மையாகிய ஆசீர்வாதம் என்ன என்பதை தியானிப்போம்.

தேவ கிருபையால் எஸ்தர் 127 நாடுகளுக்கு ராஜாத்தியாக தேர்வு செய்யப்பட்டு, எஸ்தர் தனது கடமைகளை செய்தார்கள். அதே வேளையில் மொர்தெகாய் ஆவிக்குரிய கடமைகளை செய்து வந்தார்கள். அந்நாட்களில் மொர்தெகாய் அரண்மனை வாசலில் உட்கார்ந்திருக்கிற போது, வாசல் காக்கிற ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானும், தேரேசும் வர்மம் வைத்து, இராஜாவாகிய அகஸ்வேருவின் மேல் கைபோட வகை தேடினார்கள் என்று எஸ்தர் 2:21ம் வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். இந்தக் காரியம் மொர்தெகாய்க்குத் தெரிய வந்ததினால் அவர் அதை ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான். எஸ்தர் மொர்தெகாயின் பெயரில் அதை ராஜாவுக்கு சொன்னாள் என்று எஸ்தர் 2:22ல் நாம் வாசிக்கின்றோம். இந்தக் காரியம் விசாரிக்கப்படுகிற போது அது மெய்யென காணப்பட்டது. ஆகையால் அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கி போடப்பட்டார்கள். இச்சம்பவம் ராஜ சமுகத்தில் நாளாகம புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவ்விதமாய் மொர்தெகாய் செய்த நன்மையான காரியம் உறுதி செய்யப்பட்டு இருந்ததை வேதத்தில் வாசிக்கின்றோம் (எஸ்தர் 2:23).

நன்மை செய்தோருக்கு ஏற்றக்காலத்தில் நன்மை கிடைக்கச் செய்யும் தேவன் ஏற்ற வேளையில் கிரியை செய்வார் என்பது உண்மையாகும். நாமும் பலருக்கு நன்மை செய்திருக்கலாம். ஆனால் நமக்குத் தீமையே பலர் நினைத்திருப்பார்கள். மொர்தெகாய் நன்மை செய்தாலும் சூழ்நிலை வேறு விதமாய் காணப்பட்டது. அவருக்கே தூக்குமரத்தை ஆயத்தம் செய்ய ஆமான் திட்டமிட்டு, ஆயத்தம் செய்தும் இருந்தான். ஆனால் தேவன் கிரியை செய்கிற வேளை வந்தது. ஒருநாள் ராஜாவுக்கு நித்திரை வராதபடியினால் காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தைக் கொண்டு வரச் சொன்னான். அது ராஜசமுகத்தில் வாசிக்கப்பட்டது. அப்பொழுது வாசற் காவலாளரில் ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானாவும், தேரேசும் ராஜாவின் மேல் கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருக்கிறது வாசிக்கப்பட்டது (எஸ்தர் 6:1,2). அப்பொழுது ராஜா இதற்காக மொர்தெகாய்க்கு கனமும், மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டான். அதற்கு ராஜாவை சேவிக்கிற ஊழியக்காரர், அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள் (எஸ்தர் 6:3).

தேவன் நம்மை உயர்த்தவே சித்தம் வைத்துள்ளார். ராஜா மொர்தெகாயை மேன்மைப்படுத்த எண்ணிய நேரத்தில் தனக்கு மேன்மை கிடைக்கும் என்று ராஜாவை சந்திக்க வருகிறான் ஆமான். அப்போது ராஜா ஆமானை நோக்கி, மொர்தெகாய் மேன்மையடைய உரிய நடவடிக்கை எடுக்க கட்டளையிட்டான். மொர்தெகாய் ராஜாவுக்கு உரிய கனத்தைப் பெற்று உயர்ந்த நிலைக்கு செல்ல தேவன் கிருபை செய்தார்.

அன்பானவர்களே, நாம் நன்மை செய்தும், தீமையாக நமக்கு வருகின்றது என்று கலங்கியிருக்கலாம். தேவன் ஏற்ற காலத்தில் மொர்தெகாயை உயர்த்தினது போல் நம்மையும் வேலை செய்யும் இடங்களிலும், குடும்பத்திலும், ஊழியத்திலும் உயர்த்துவார். அதற்கு இன்னும் அதிகமாக வேதத்தை வாசித்து, எந்தச் சூழ்நிலையிலும் சோர்ந்து போகாமல் ஜெபித்து, வேதத்தின் மகிமையினாலும், மகத்துவங்களினாலும் நிறைந்து வாழ்வோம். ஆமென்.

*If undelivered please return to....*

**Bro.P.Duraisingh Gnanapragasam**
14-6-3(34) Ratna Complex, SURANDAI - 627 859.
Tenkasi (Dt), Tamil Nadu, India.
www.revival.org.in
Cell: 90255 53614, 99653 36459, 9942950132
Ph: 04633-290480

*To.*
*Bro/Sis* ____________________

Pin

Printed by P.Thanapaul, Published by P.Duraisingh Gnanapragasam owned by P.Duraisingh Gnanapragasam and Printed at Ravi Printers, 10-7-16 Bus-Stand Road, Surandai - 627 859. Tenkasi (Dist) and published at 14-6-3(34), Ratna Complex, Surandai - 627 859. Tenkasi (Dist) Editor P.Duraisingh Gnanapragasam.